# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

**අංක 14,935/4 — 1970 දෙසැම්බර් 10 වැනි බ්‍රහස්පතින්ද — 1970.12.10**

**14,935/4 ம இலக்கம்—1970 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 10 ந் திகதி** வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரச பேரவைக் கட்டளை—1946**

**தேர்தல் தொகுதி இல. 74—ஊர்காவற்றுறை**

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரின் 1969 ஆம் ஆண்டு யூன் மாதம் 20 ஆந் திகதிய கட்டளைப்படி, 1970 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 27 ஆந் திகதிய 14,895 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட யாழ்ப்பாண மாவட்டத்தின் ஊர்காவற்றுறை—தீவுப்பகுதி காரியாதிகாரி பிரிவின் வேலணை மேற்கு, சரவணை கிராம சேவையாளர்களின் பிரிவுகள் புனரமைப்புத் தொடர்பாக, யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரால் செய்யப்பட்ட அறிவித்தலுக்கமைய, 1946 ஆம் ஆண்டின் இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரச பேரவைக் கட்டளையின் 10 (3) ஆம் பிரிவின் கீழ், 1961 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 9 ஆந் திகதியினைக் கொண்ட 12,821 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் அட்டவணையில் வாக்கெடை மாவட்டங்கள் " வை, சிசி, டிடி, ஈஈ " விவரங்களுக்குப் பதிலாகக் கீழ்வரும் அட்டவணையிலுள்ள விபரங்கள் இடப்பட்டுள்ளனவெனப் பொதுத் தகவலுக்காக இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

தேர்தல் கந்தோர்,
கச்சேரி,
யாழ்ப்பாணம்,
1970 ம் ஆண்டு நவம்பர் மீ 15 ந் உ.

செ. நடராசா,
உதவிப் பதிவு உத்தியோகத்தர்,
தேர்தல் தொகுதி இல. 74—ஊர்காவற்றுறை

அட்டவணை

| சம்மதிச் சீட்டிடும் நிலையம் | ஒதுக்கப்பட்ட எழுத்து அல்லது எழுத்துக்கள் | சம்மதிச் சீட்டிடும் நிலையம் அமைக்கப்படும் இடம் |
|---|---|---|
| ஊர்காவற்றுறை—தீவுப்பகுதி காரியாதிகாரி பிரிவின் சுருவில் கிராம சேவையாளரின் பிரிவைச் சேர்ந்த சரவணைக் கிராமத்தின் ஓர் பகுதி அடங்கிய நாரந்தனைக் கிராம சபையின் 3 ஆம் வட்டாரமும், சுருவில் கிராமத்தின் ஓர் பகுதியும், சரவணைக் கிராமத்தின் ஓர் பகுதியும் அடங்கிய நாரந்தனைக் கிராம சபையின் 4 ஆம் வட்டாரமும் | வை | .. நாரந்தனை கிராம சபையின் 3 ஆம் வட்டாரம் |
| ஊர்காவற்றுறை—தீவுப்பகுதி காரியாதிகாரி பிரிவின் வேலணை மேற்கு கிராம சேவையாளரின் பிரிவைச் சேர்ந்த சரவணைக் கிராமத்தின் ஓர் பகுதியும், வேலணை மேற்கு கிராமத்தின் ஓர் பகுதியும் அடங்கிய வேலணை கிராம சபையின் 8 ஆம் வட்டாரம் | சிசி | .. வேலணை கிராம சபையின் 8 ஆம் வட்டாரம் |
| ஊர்காவற்றுறை—தீவுப்பகுதி காரியாதிகாரி பிரிவின் சுருவில் கிராம சேவையாளரின் பிரிவைச் சேர்ந்த சுருவில் கிராமத்தின் ஓர் பகுதி அடங்கிய நாரந்தனை கிராம சபையின் 5 ஆம் வட்டாரம் | டிடி | .. நாரந்தனை கிராம சபையின் 5 ஆம் வட்டாரம் |
| ஊர்காவற்றுறை—தீவுப்பகுதி காரியாதிகாரி பிரிவின் வேலணை மேற்கு கிராம சேவையாளரின் பிரிவைச் சேர்ந்த வேலணை மேற்கு கிராமம் அடங்கிய வேலணை கிராம சபையின் 6 ஆம், 7 ஆம் வட்டாரங்களும், சரவணைக் கிராமத்தின் ஓர் பகுதி அடங்கிய வேலணை கிராம சபையின் 7 ஆம் வட்டாரத்தின் எஞ்சிய பகுதியும், வேலணை கிழக்கு கிராம சேவையாளரின் பிரிவைச் சேர்ந்த வேலணை கிழக்கு கிராமத்தின் ஓர் பகுதி அடங்கிய வேலணை கிராம சபையின் 6 ஆம் வட்டாரத்தின் எஞ்சிய பகுதியும் | ஈஈ | .. வேலணை கிராம சபையின் 7 ஆம் வட்டாரம் |

12—599/4.

## இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரச பேரவைக் கட்டளை—1946

தேர்தல் தொகுதி இல. 84—கிளிநொச்சி

1970 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 5 ந் திகதியின் 14,896 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இராமநாதபுரம் கிராம சேவையாளரின் பிரிவுப் புனரமைப்புத் தொடர்பாக, யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரால் செய்யப்பட்ட அறிவித்தலுக்கமைய, 1946 ஆம் ஆண்டின் இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரச பேரவைக் கட்டளையின் 10 (3) ஆம் பிரிவின் கீழ் 1966 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 1 ஆந் திகதியினைக் கொண்ட 14,702 ம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் அட்டவணையில் வாக்கெடை மாவட்டம் " வை " யின் விபரங்களுக்குப் பதிலாகக் கீழ்வரும் அட்டவணையிலுள்ள விபரங்கள் இடப்பட்டுள்ளவெனப் பொதுத் தகவலுக்காக இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

செ. நடராசா,
உதவிப் பதியும் உத்தியோகத்தர்,
தேர்தல் தொகுதி இல. 84—கிளிநொச்சி.

தேர்தல் அலுவலகம்,
கச்சேரி,
யாழ்ப்பாணம்.
1970 ம் ஆடு நவம்பர் மீ 15 ந் உ.

அட்டவணை

| வாக்கெடை மாவட்டம் | ஒதுக்கப்பட்டுள்ள எழுத்து அல்லது எழுத்துக்கள் | வாக்களிப்பு நிலையம் அமைக்கப் படும் இடம் |
|---|---|---|
| கரைச்சி இறைவரி உத்தியோகத்தர் பிரிவின் வட்டக்கச்சிக் கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த, வட்டக்கச்சிப் பழைய கிராமமும், வட்டக்கச்சி குடியேற்றத் திட்டமும், வட்டக்கச்சி கிராம விஸ்தரிப்புத் திட்டத்தின் பகுதியும் (பரந்தன்–முல்லைத்தீவு வீதியின் 7 ஆம் கட்டையிலிருந்து இராமநாதபுரம் போகும் வீதியின் மேற்குப் பாகம்) வட்டக்கச்சிப் படித்த வாலிபர் திட்டமுமடங்கிய கரைச்சிக் கிராம சபையின் 16 ஆம் வட்டாரம். | " வை " .. | கரைச்சி கிராமசபையின் 16 ஆம் வட்டாரம். |

12–599/5

---

## 1946 ம் ஆண்டின் இலங்கைப் (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரச பேரவைக் கட்டளை

தேர்தல் தொகுதி இலக்கம் 93—கல்முனை

(அ) அம்பாறை மாவட்டத்தில் இருக்கும் கரவாகு நிந்தவூர் பற்றுகள் பிரிவுக் காரியாதிகாரியின் பிரிவிலுள்ள உப-பிரிவுகளாக்கப்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகள் சம்பந்தமாக அம்பாறை அரசாங்க அதிபரினல் 1969 ம் ஆண்டு, யூன் மாதம் 13 ம் திகதி 14,858 ம் இலக்கம் கொண்ட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட விளம்பரத்திற்கமைய, 1946 ம் ஆண்டின் இலங்கைப் (பாராளுமன்றத் தேர்தல்) அரசப் பேரவைக் கட்டளையின் 10 (3) ம் பிரிவின் கீழ் 1963 ம் ஆண்டு, செத்தெம்பர் மாதம் 10 ம் திகதி 13,852 ம் இலக்க விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு, 1968 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 20 ம் திகதிய 14,828/16 ம் இலக்க விசேட வர்த்தமானியால் திருத்தி பிரசுரிக்கப்பட்ட மேற்படி தேர்தல் தொகுதியின், " டீ ", " இ " என்னும் சம்மதச் சீட்டிடும் பகுதிக்கு ஒதுக்கப்பட்ட விபரங்களுக்குப் பதிலாக இத்துடனிருக்கும் அட்டவணையின் கீழ் குறிப்பிட்டுள்ள விபரங்கள் அமையுமெனவும்,

(ஆ) அம்பாறை மாவட்டத்தில் இருக்கும் கரவாகு நிந்தவூர் பற்றுகள் பிரிவுக் காரியாதிகாரியின் பிரிவை, உப-பிரிவுகளாகப் பிரித்து, உள்நாட்டு அலுவல் அமைச்சரின் நிரந்தரக் காரியதரிசியினல் 1969 ம் ஆண்டு, நவெம்பர் மாதம் 21 ம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி இல. 14,881 இன் விளம்பரத்திற்கு அமைய இவ்விளம்பரத்தின் (அ) பகுதியில் குறிப்பிடப்பட்டிருக்கும் விளம்பரத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் சம்மதச்சீட்டிடும் பகுதிகளாகிய " ஏ ", " பி ", " சி ", " எப் ", " ஜீ ", " எச் ", " ஐ ", " ஜே ", " கே ", " எல் ", " எம் ", " என் ", " ஓ ", " பீ ", " கியூ ", " ஆர் ", " எஸ் ", " ரீ " களில் காணப்படும் " கரவாகு நிந்தவூர் பற்றுகள் " எனும் சொற்களுக்கு பதிலாக " கரவாகு பற்று " எனும் சொற்கள் உபயோகிக்கப்படல் வேண்டுமென்றும்,

இத்தால் பொதுத் தகவலுக்காக குறித்துக் காட்டப்பட்டிருக்கின்றது.

டபிள்யூ. டீ. எல். பெரேரா,
உதவிப் பதிவு உத்தியோகத்தர்,
தேர்தல் தொகுதி இலக்கம் 93—கல்முனை.

தேர்தல் அலுவலகம்,
அம்பாறை,
1970 ம் ஆடு ஒக்தோபர் மீ 25 ந் உ.

அட்டவணை

| சம்மதிச் சீட்டிடும் மாவட்டம் | குறித்தொதுக்கப் பட்ட எழுத்து அல்லது எழுத்துக்கள் | சம்மதிச் சீட்டிடும் நிலையம் அல்லது நிலையங்கள் அமைக்கப் படும் பிரதேசம் |
|---|---|---|
| கரவாகு–நிந்தவூர் பற்றுகளின் 47ஏ இலக்க சாய்ந்தமருது (4 ம், 5 ம் பிரிவுகள்) கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த சாய்ந்தமருது கிராமத்தின் (4 ம் பிரிவும்) சாய்ந்தமருது கிராமத்தின் (5 ம் பிரிவின்) பாகமுமடங்கிய கரவாகு தெற்கு கிராமச் சபையின் 7 ம், 8 ம் இலக்க வட்டாரங்கள் | " டீ " | .. சாய்ந்தமருது (4 ம் பிரிவு) |
| கரவாகு–நிந்தவூர் பற்றுகளின் 47ஏ இலக்க சாய்ந்தமருது (4 ம், 5 ம் பிரிவுகள்) கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த சாய்ந்தமருது கிராமத்தின் (5 ம் பிரிவின்) எஞ்சிய பாகமும், 47 ம் இலக்க சாய்ந்தமருது (6 ம் பிரிவு) கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த சாய்ந்தமருது கிராமத்தின் (6 ம் பிரிவும்) அடங்கிய கரவாகு தெற்கு கிராமச் சபையின் 9 ம், 10 ம் இலக்க வட்டாரங்கள் | " இ " | .. சாய்ந்தமருது (6 ம் பிரிவு) |

12–599/6

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.